பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

06 11 2026 7 15

வெள்ளிக்கிழமை காலை

ஆகாஷ்வாணி

தலைப்புச் செய்திகள்

1. விளிம்புநிலை மக்களின் மேம்பாட்டிற்காக புதிய திட்டங்கள் வகுக்கப்பட வேண்டியதன் அவசியதை பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

2. இளம் தலைமுறையினரிடையே நாட்டுப்பற்றை ஊக்குவிக்க வேண்டும் என்று உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா கேட்டுக் கொண்டுள்ளார்.

3. இந்தியா - ஆன்ட்டிகுவா இடையேயான ஒத்துழைப்பு மேலும் வலுவடையும் என்று வெளியுறவு அமைச்சர் டாக்டர். ஜெய்சங்கர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

4. உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட பிரளய் ஏவுகணை சோதனை வெற்றி பெற்றுள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் கூறியுள்ளது.

5. இளையோர் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளின் பேட்மிண்டன் பிரிவில், இந்தியாவின் Tanvi Patri வெள்ளிப்பதக்கம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<><><><><>

விளிம்புநிலை மக்களின் மேம்பாட்டிற்காக புதிய திட்டங்கள் வகுக்கப்பட வேண்டியதன் அவசியதை பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நித்தி ஆயோக்கின் புதிய நிர்வாகக் குழுவினருடன் கலந்துரையாடிய பிரதமர் இதனை தெரிவித்தார்.

அடித்தட்டு மக்களின் முன்னேற்றத்தை கருத்தில்கொண்டு கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் மாநில அரசுகளுடன் இணைந்து செயல்படவேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

பின்தங்கிய மாவட்டங்களின் மேம்பாட்டு நடவடிக்கைகளை செயல்படுத்த ஏதுவாக கள நிலவரங்களை துல்லியமாக மதிப்பிட வேண்டும் என்று அதிகாரிகளுக்கு பிரதமர் அறிவுறுத்தினார்.

வேலைவாய்ப்பு உருவாக்கம், உலகத்தரம் வாய்ந்த உள்கட்டமைப்பு வசதிகள், உற்பத்தி மற்றும் தொழிலநுட்பம் சார்ந்த துறைகளில் உள்நாட்டு திறமைகளை வலுப்படுத்துவது குறித்தும் இதில் விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<><><><><>

இளம் தலைமுறையினரிடையே நாட்டுப்பற்றை ஊக்குவிக்க வேண்டும் என்று உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா வலியுறுத்தியுள்ளார்.

ஹரியானா மாநிலம் அம்பாலாவில் முதல் சுதந்திரப் போருக்கான தியாகிகள் நினைவிடத்தை திறந்து வைத்து பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

நாட்டின் சுதந்திரப் போராட்ட வீரர்களின் தியாகத்திற்கு மதிப்பளிக்கும் வகையில் இந்த நினைவிடம் அமைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

1857 -ம் ஆண்டு மே 10 -ம் தேதி அம்பாலா கண்டோண்மென்டில் ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிராக ஆயுதப் போராட்டம் தொடங்கியதை திரு. அமித்ஷா நினைவு கூர்ந்தார்.

22 ஏக்கர் பரப்பளவில் 594 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள இந்த நினைவிடத்தில், வரலாற்று ஆவணங்கள், பாரமபரிய கலைத்திறன், டிஜிட்டல் தொழில்நுட்பம் ஆகியவற்றை உள்ளடக்கிய 22 காட்சியகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

<><><><><>

இந்தியா - ஆன்ட்டிகுவா இடையே சுகாதாரம், கல்வி, திறன் மேம்பாடு போன்ற துறைகளில் இரு தரப்பு ஒத்துழைப்பு வலுவடையும் என்று வெளியுறவு அமைச்சர் டாக்டர். ஜெய்சங்கர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அரசுமுறை பயணமாக ஆன்ட்டிகுவா மற்றும் பார்புடா சென்றுள்ள அமைச்சர், இந்திய வம்சாவளியினர் ஏற்பாடு செய்துள்ள கூட்டத்தில் கலந்துகொண்டு பேசினார்.

இரு நாடுகளுக்கும் இடையேயான நட்புறவை மேம்படுத்துவதில், வெளிநாடுவாழ் இந்தியர்கள் முக்கியப்பங்கு வகிப்பதாக அவர் தெரிவித்தார்.

இதனிடையே, காமன்வெல்த் தலைவர்கள் மாநாட்டின் ஒரு பகுதியாக கயானா அதிபர் திரு. இர்பான் அலியை சந்தித்து பேசினார்.

இந்த சந்திப்பின் போது, கயானாவின் பொது மற்றும் பாதுகாப்பு உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக 500 மில்லியன் டாலர் கடனுதவி வழங்கப்படும் என்று திரு. ஜெய்சங்கர் தெரிவித்தார்.

<><><><><><>

இந்தியா-நேபாள, இடையே பல்வேறு துறைகளில் ஒத்துழைப்புகள் வலுவடைந்து வருவதாக வெளியுறவுத்துறை செயலாளர் திரு விக்ரம் மிஸ்ரி தெரிவித்துள்ளார்.

அரசுமுறைப் பயணமாக நேபாளம் சென்றுள்ள அவர், அந்நாட்டுப் பிரதமர் திரு பாலேந்திர ஷா-வுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதனையடுத்து இருநாடுகளும் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில், நேபாளப் பிரதமரின் இந்தியப் பயணத்தின்போது, மேற்கொள்ளப்படக்கூடிய நடவடிக்கைகள் குறித்து விவாதித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவரது இந்தப் பயணத்தின் போது, அந்நாட்டு நிதி அமைச்சர், எரிசக்தி, நீர்வளம் மற்றும் நீர்ப்பாசனத்துறை அமைச்சர், உள்கட்டமைப்பு மேம்பாட்டுத்துறை அமைச்சர் ஆகியோரைச் சந்தித்துப் பேசினார்.
வர்த்தகம், நீர்மின்சாரம், உள்கட்டமைப்பு, எல்லை மேலாண்மை, எரிசக்தி மற்றும் மக்கள் தொடர்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பு வலுப்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<><><><><><>

உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு விண்ணில் திசையை மாற்றிக்கொள்ளும் திறன் படைத்த பிரளய் ஏவுகணை வெற்றிகரமாக சோதித்து பார்க்கப்பட்டதாக மத்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு தெரிவித்துள்ளது.

ஒடிசா மாநிலம் டாக்டர். ஏ.பி.ஜெ. அப்துல்கலாம் தீவில், இந்த சோதனை நேற்று நேடைபெற்றது.

இந்த சோதனையின் போது ஏவுகணையின் அனைத்து செயல்பாடுகளும் முழுமையாக சோதிக்கப்பட்டதாகவும், இதனை ராணுவத்தில் இணைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் பாதுகாப்பு அமைச்சகம் கூறியுள்ளது.

இந்தியாவில் உள்நாட்டு பாதுகாப்பு திறனை இது மேலும் வலுப்படுத்தும் என்று அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

<><><><><><>

உத்தரப்பிரதேச மாநிலத்தில் ஐந்து லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான சாலைத் திட்டங்களைச் செயல்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

ஜான்பூர் மாவட்டத்தில் 3,677 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைத்து உரையாற்றிய அவர், இதனைத் தெரிவித்தார்.

இதில், ஒரு லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும், ஒரு லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டப் பணிகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் அவர் கூறினார்.

மேலும் மூன்று லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை செயல்படுத்துவது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

பெட்ரோல் மற்றும் டீசல் இறக்குமதிக்காக, ஆண்டுதோறும் 22 லட்சம் கோடி ரூபாய் செலவிடப்பட்ட வருவதாகவும், மாற்று எரிபொருட்களை ஊக்குவிப்பதன் மூலம் இறக்குமதியைச் சார்ந்திருக்கும் நிலை குறைவதுடன், விவசாயிகளின் வருவாய் அதிகரிக்கும் என்றும் திரு நிதின் கட்கரி கூறினார்.

<><><><><>

நாடு முழுவதும் டிஜிட்டல் ஆயுள் சான்றிதழ் குறித்த பிரச்சாரத்தை மத்திய பணியாளர் நலத்துறை இணையமைச்சர் டாக்டர். ஜிதேந்திர சிங் புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

இம்மாதம் இறுதிவரை நடைபெறும் இந்த பிரச்சாரத்தை மத்திய ஓய்வூதியதாரர்கள் நலத்துறை ஏற்பாடு செய்துள்ளது.

ஓய்வூதியதாரர்கள் ஆயுள் சான்றிதழை வீட்டில் இருந்தபடியே எளிதாக டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் மூலம் உருவாக்க வகை செய்யப்பட்டுள்ளதாக மத்திய பணியாளர் நலத்துறை அமைச்சகம் தெரிவத்துள்ளது.

பொதுத்துறை வங்கிகள், அஞ்சலக வங்கிகள், இந்திய தனித்துவ அடையாள ஆணையம், ஓய்வூதியதாரர்கள் நலத்துறை ஆகியவை இணைந்து இந்த பிரச்சாரத்தை மேற்கொள்கின்றனர்.

<><><><><>

Kalhanar எழுதிய ராஜதரங்கினி, மகாபாரதம், கவுடில்யரின் அர்த்த சாஸ்திரம் ஆகிய மூன்று இலக்கியங்கள் யுனெஸ்கோவின் உலக நினைவக பதிவேட்டில் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்தியாவின் இலக்கியம் மற்றும் அறிவுசார் பாரம்பரியத்தை சேர்ந்த இந்த படைப்புகளுக்கு யுனெஸ்கோ அங்கீகாரம் கிடைத்துள்ளதை அடுத்து, இந்த பதிவேட்டில் இடம்பெற்றுள்ள இந்திய படைப்புகளின் எண்ணிக்கை ஆறாக அதிகரித்துள்ளது.

<><><><><>

உயர்கல்வி நிறுவனங்களில் யுஜிசி-யின் சமத்துவ விதிமுறைகளை மறுஆய்வு செய்வதற்கு சிறப்புக் குழுஅமைக்கப்படும் என்று மத்திய அரசு உச்ச நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி சூர்ய காந்த், நீதிபதி ஜாய்மால்யா பாக்சி ஆகியோர் அடங்கிய அமர்வு, உயர்கல்வி நிறுவனங்களில், அனைத்து மாணவர்களும், சாதி அல்லது சமூகப் பாகுபாடு இல்லாமல், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் சம வாய்ப்புகள் பெறுவதை உறுதி செய்யப்பட வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது.

மாணவர்களின் அச்சங்களைக் களைவதற்கும், மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வது குறித்து ஆய்வு செய்து வருவதாகவும் மத்திய அரசு கூறியுள்ளது.
இதனையடுத்து இந்த வழக்கின் மீதான விசாரணையை நீதிமன்றம் நான்கு வாரங்களுக்கு ஒத்தி வைத்தது.

<><><><><>

கடலோர ஆந்திரப்பிரதேசம், தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால், கேரளம், மாஹே ஆகிய பகுதிகளின் ஓரிரு இடங்களில் அடுத்த மூன்று தினங்களுக்கு கனமழை வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஒடிசா, கர்நாடகா, லட்சத்தீவு உள்ளிட்ட பகுதிகளில் ஓரிரு இடங்களில் இன்று இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

இதனிடையே, தில்லியில் அதிகாலை வேளைகளில் லேசான பனிமூட்டம் காணப்படும் என்றும், அந்த மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், தில்லி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் காற்றின் தரம் மிக மோசமாக உள்ளது என்று மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் கூறியுள்ளது.

<><><><><>

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

செனகலின் Dakar-ல் நடைபெற்று வரும் இளையோர் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளின் பேட்மிண்டன் பிரிவில், இந்தியாவின் Tanvi Patri வெள்ளிப்பதக்கம் வென்றார்.

உலக துப்பாக்கி சுடுதல் சாம்பியன் போட்டியில், இந்தியா ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

தோஹாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின், மகளிர் 10 மீட்டர் ஏர் பிஸ்டல் குழுப் போட்டியில், இந்தியா இப்பதக்கத்தைக் கைப்பற்றியது.

ஆசிய சாம்பியன் கோப்பை ஹாக்கிப் போட்டியில், இந்தியா பட்டம் வென்றது.

மொஹாலியில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில், இந்திய அணி 4-1 என்ற கோல் கணக்கில், ஜப்பான் அணியை வென்று சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

---

06 11 2026 07 15 விளையாட்டுச் செய்திகள்-2

சென்னை ஓபன் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Shrivalli Bhamidipaty-Rajeshwari Revathi இணை, காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 6-3, 6-2 என்ற செட் கணக்கில் செக் குடியரசின் Anate Kucmova-Anate Laboutkova இணையை வென்றது.

---

19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில், இந்தியா இன்று நேபாளத்தை எதிர்கொள்கிறது.

Al-Amerat-ல் இப்போட்டி காலை 10.30 மணிக்குத் தொடங்குகிறது.

<><><><><><><><><><><>